Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.அருணாச்சலம் | Occupation | கிராம உதவியாளர் ஓய்வு |
| Father's name | அண்ணாமலை | Calling | |
| Village | இடையன்குளம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of February 2026.

10.02.2026

1, 2, 4 எதிரிகள் ஆஜர். 5ம் எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது இடையன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2014ம் வருடம் செப்டம்பர் மாதம் ஒரு நாள் மம்சாபுரம் கிராமம் கந்தசாமிபிள்ளை தெருவிலுள்ள அஜித் என்ற முத்துக்குமாரை விசாரணை செய்வதற்கு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் என்னையும் கிராம நிர்வாக அலுவலர் வேலாயுதத்தையும் அழைத்தார். மேற்படி எதிரியை எந்தவித துன்புறுத்தலும் அச்சுறுத்தலுமின்றி விசாரணை செய்தார்கள். அதுமட்டுமின்றி மேற்படி நபரின் கூட்டாளிகளான 4பேரையும் விசாரித்தார்கள். மம்சாபுரம் ஸ்ரீராம் மெடிக்கலில் ஒரு Invertor திருடுபோனது சம்மந்தமாக மேற்படி முத்துக்குமாரையும் சேர்த்து 5 நபர்களை போலீசார் விசாரித்தார்கள். மேற்படி முத்துக்குமாரின் கூட்டாளிகளில் ஒரு நபர் மேற்படி Invertor ஐ திருடி விற்றது பற்றி கூறினார். அதுமட்டுமின்றி அன்றைய தினமே போலீசார் எஸ்ஏஆனந்தம் மில்லில் ஒரு Invertor காணாமல் போனது சம்மந்தமாக விசாரித்தார்கள் அதற்கும் நானும் கிராம நிர்வாக அலுவலர் வேலாயுதமும் சாட்சியாக இருந்தோம். எங்களிடம் போலீசார் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் முத்துக்குமார்

என்ற அஜித்குமார் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2 வது கையெழுத்து அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியிலுள்ள 2வது கையெழுத்து அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

கடந்த 24.09.2014 அன்று திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய வட்ட ஆய்வாளர் வன்னியம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.103/2014 பிரிவுகள்.454, 457, 380 இதச வழக்கில் தொடர்புடைய முத்துக்குமார் என்ற அஜித்குமார் என்பவரை விசாரிக்க உதவியாக இருக்குமாறு அழைத்ததன் பேரில் நானும் வேலாயுதம் என்பவரும் வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் ஆஜர் ஆனதாகவும், எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது முத்துக்குமார் என்பவர் அவரது கூட்டாளிகளான காளிமுத்து முனீஸ்வரன், முத்துராஜ், குருசாமி ஆகியோர்களுடன் சேர்ந்து 2013ம் வருடம் தமிழ் வருட பிறப்பிற்கு முதல் நாள் இரவு ஸ்ரீராம் மெடிக்கல்ஸில் கம்ப்யூட்டர் போன்ற பொருட்களை திருடியதாகவும் அதன் பின் திருடிய பொருட்களை சங்கர் என்பவரிடம் அடமானமாக வைத்து 30,000/- ரூபாய் வாங்கி குருசாமி என்பவரிடம் பிரித்து கொண்டதாகவும் அதன் பின் மேற்படி அவரது கூட்டாளிகளடன் சேர்ந்து 2014ம் வருடம் எஸ்ஏஏ ஆனந்தம் ஸ்பின்னிங் மில்ஸில் Projector, Amplifier, Hand mike போன்றவற்றை திருடியதாக ஒப்புக்கொண்டதாகவும் அதனை எங்கள் முன்னிலையில் போலீசார் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியதாகவும் அதன் பின் Invertor ஒன்றையும் போலீசார் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியதாகவும் அதில் நானும் வேலாயுதம் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.